DINA MANI
Date. 28/10/18

# பிளாஸ்டிக் மாற்றுப் பொருள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும்

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல்

தாம்பரம், அக்.27: மக்களிடம் பயன்பாட்டில் உள்ள பிளாஸ்டிக் பொருள்களுக்குப் பதிலாக, மாற்றுப் பொருள்களை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் பி.பொன்னையா கூறினார்.

கிழக்குதாம்பரம் நகராட்சி பள்ளியில் பிளாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வுக் கண்காட்சியை சனிக்கிழமை தொடங்கி வைத்து, அவர் மேலும் பேசியது:-

காஞ்சிபுரம் மாவட்டத்தை பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு இல்லாத மாவட்டமாக மேம்படுத்தும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் மாற்றுப் பொருள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும்.

மேலும், பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு உகந்த மக்கும் திறன் கொண்ட பொருட்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.



சென்னையை அடுத்த கிழக்கு தாம்பரம் நகராட்சி பள்ளியில் பிளாஸ்டிக் மாற்றுப் பொருள்கள் குறித்த கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிடுகிறார் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் பி.பொன்னையா. உடன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் இளங்கோவன், மண்டல பொறியாளர் முருகேசன் உள்ளிட்டோர்.

இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள எளிதில் மக்கும் இயல்புடைய துணி மற்றும் சணல் பை, பாக்கு மட்டை, மக்காச்சோளம், காகித கூழ் ஆகியவற்றில் தயாரிக்கப்பட்ட பொருள்களை பொதுமக்கள் பயன்படுத்த பழகவேண்டும்.

பள்ளி மாணவர்கள் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து அறிந்து, அவற்றை பயன்படுத்துவதால் நிகழும் சுற்றுசூழல் மாசு, தீமை குறித்து பெற்றோர்களிடம் விளக்க வேண்டும் என்றார் பி.பொன்னையா.

விழாவில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆத்மா தொண்டு நிறுவனத்தின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் வை. ஜெயக்குமார், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் இளங்கோவன், மண்டல பொறியாளர் முருகேசன், தாம்பரம் நகராட்சி ஆணையர் தாம்பரம் கே.கிருஷ்ணமூர்த்தி, பல்லாவரம் நகராட்சி ஆணையர் கருப்பையா ராஜா, நகராட்சி சுகாதார அலுவலர் அறிவு செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் ஆல்பர்ட் சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.